# ச்சோஸென் ஜெனெரேஷன்

# CHOSEN GENERATION

(Tamil - Monthly Magazine)


செடி : 10 மலர் : 6 Plant : 10 Flower 6 ஏப்ரல் 2025 / April 2025

ஆண்டு சந்தா ரூ.50/- Annual Subscription Rs.50/- தனிப்பிரதி விலை ரூ.5/-




அவசர ஜெப உதவிக்கு

ஊழியரிடம் எந்த நேரத்திலும் நேரிடையாக தொடர்பு கொள்ள மொபைல் போன் எண்:

**94433-46119**

# ஆசிரியர் மனம்

கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பான சகோதர ! சகோதரிகளுக்கு இயேசுவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள்.

இந்த மாதத்தின் வாக்குத்தத்தமாக ஏசா 58:11ன்படியாக கர்த்தர் நித்தமும் நடத்துவார். பெரிய அற்புதங்களைச் செய்வார். ஆத்துமாவை திருப்தி செய்வார். நீர்ப்பாய்சலான தோட்டத்தைப் போலவும், வற்றிப் போகாத நீரூற்றைப் போலவும் நம்மை நடத்துவார். விசுவாசமுள்ளவர்களாய் எப்போதும் கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாய் இருங்கள். நாம் இந்த மாதத்தில் பலவிதமான எதிர்பார்த்தல்களோடு இருப்போம். கர்த்தர் நம் இருதயத்தின் நினைவுகளை தூரத்திலிருந்தே அறிகிறவர். தாவீது சொல்லும்போது, உம்மாலே ஒரு சேனைக்குள் பாய்வேன். என் தேவனாலே ஒரு மதிலை தாண்டுவேன். (சங். 18:29)

இந்த மாதிரியான நம்பிக்கை நமக்கு இருக்கும்போது, நாம் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியது இல்லை.

கர்த்தருடைய வருகை மிக சமீபம். நாம் விழிப்புவர்களாய், ஜெபத்தோடு நாட்களை, கடந்து போக கர்த்தர் தாமே நம்மை பெலப்படுத்துவாராக. சங். 34:1ன்படி கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும் என்று சொல்லி, அவரைத் துதியுங்கள். கர்த்தர் தேவைகளை சந்திப்பார்.

வாசக சகோதர, சகோதரிகளுக்கு :- நான் சென்ற மாதம் தெரிவித்தது போல பத்திரிகையின் RNI Registration - Postal Concession நிறுத்தப்பட்டுள்ளது. எனவே தேவைப்படுகிறவர்களுக்கு மட்டும் அனுப்ப நான் தீர்மானித்துள்ளேன். இதுவரை இலவசமாக அனுப்புகிறேன். இனியும் அனுப்புவேன். விலாசம் மாறும் போது தெரியப்படுத்துங்கள். கர்த்தர் தாமே இந்த சபை ஊழியத்தை அடியேனைக் கொண்டு நடத்தி வருகிறார். ஜெபித்துக் கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் இப்பத்திரிகையை அறிமுகப்படுத்துங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில் சகோதரி

Sarah Vimal

(சாரா விமல்)

# ஒரே தரம் பலியிடப்பட்ட 'இயேசுவின் சரீரம்'

எனக்கன்பான சகோதர, சகோதரிகளே ! உங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் கர்த்தரின் பாடுகளை நினைத்து அழுது, ஜெபிப்பதுண்டு. ஆனால் இயேசு எதற்காக மரிக்க வேண்டும். அவர் பாவம் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. (I பேது 2:22) பழைய ஏற்ப்பாட்டு நிலை, ஒரு மனிதன் கர்த்தரின் கட்டளைகளை மீறி பாவம் செய்தால், தான் செய்த பாவத்தினிமித்தம் பழுதற்ற ஒரு இளங்காளையை பாவ நிவாரணபலியாக, ஆசாரியனிடம் கொண்டு வர வேண்டும். (லேவி 4:2-4) எனவே இப்படிப்பட்ட நிலையை மாற்ற பலியையும் காணிக்கையும் விரும்பவில்லை. ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர் (எபி. 10:5)

### பாவ நிவாரண பலி

பாவம் செய்து ஒவ்வொரு முறையும் இப்படி பலி செலுத்திக் கொண்டு இருந்தால், பாவம் பெருகிக் கொண்டுதான் இருக்கும். எனவே நம் பாவங்களை நீக்க பரிசுத்த தேவன் பலியானார்.

### அவர் விருப்பம்

எபி 10:5- அவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்.

ஏசா 1:11 - உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு என்று கர்த்தர் சொல்கிறார். ஆட்டுக் கடாக்களின் தகன பலிகளும் எனக்கு அரோசிகமாய் இருக்கிறது. உங்கள் சர்வாங்க தகனங்கள் எனக்கு விருப்பம் அல்ல. நீங்கள் பாவம் செய்து விட்டபின் பல செலுத்தி மறுபடியும் அதே பாவம் செய்வதில் பலன் என்ன?

### காணிக்கை

ஏசா 1:13 - இனி வீண் காணிக்கைகளை கொண்டு வர வேண்டாம் என்றும் சங்க 40:6ல் பலியையும் காணிக்கையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர். கர்த்தர் நம்முடைய காணிக்கையை விரும்பவில்லை. நாம் நம் பாவங்களை விட்டு இருதயத்தை சுத்தமாக்கி

அவருக்கு பிரியமாய் நடக்கும் போது அவர் நம்மை ஆசீர்வதிப்பார். எபே. 5:10ன் படி கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்.

**ஒப்புரவாகுதல்**

நீ பலிபீடத்தில் உன் காணிக்கையை செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று நினைவு கூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனேடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை செலுத்து" (மத் 5:23, 24)

இயேசு கிறிஸ்துவும் நமக்காக தம்மைத் தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்து, நம்மில் அன்பு கூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள். (எபே. 5:2).

**அன்பை வெளிப்படுத்த**

கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். (ரோ.5:8) நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். என்னிடத்தில் அன்பாய் இருக்கிறவன், என் பிதாவினிடத்திலும் அன்பாய் இருப்பான். நானும் அவனில் அன்பாய் இருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட போதும் தன்னை இகழ்ந்து பேசின கள்ளனையும் மன்னித்தார்.

**பழுதற்றதாக**

லேவி 9:3ல் பாவ நிவாரணபலியாக பழுதற்ற ஒரு ஆட்டுக் குட்டியை கர்த்தருடைய சந்நிதியில் பலியிட வேண்டும். யோவா.1:36ல் இயேசு நடந்து போகிறதை யோவான் கண்டு, இதோ தேவ ஆட்டுக்குட்டி என்றார்.

**சரீரம்**

ரோ 12:1 - நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவ பலியாய் ஒப்புக் கொடுக்க வேண்டும். அநேகராகிய நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாய் இருக்கிறோம். (ரோ.12:5). உங்கள்

சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கிறது. (I கொரி 6:19) இயேசுவை வாரினால் அடிப்பித்து சிலுவையில் அறையும்படிக்கு ஒப்பு கொடுத்தார்கள்.


எனவே எனக்கருமையான சகோதர, சகோதரிகளே ! இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணினார். (எபி. 10:19) நாம் இனி பாவத்திற்கு அடிமைகளாய் இராமல், நமக்காக தமது ஜீவனை கொடுத்த இயேசுவை பற்றிக் கொள்ள பிரயாசப் படவேண்டும்.

கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய நம்முடைய சரீரத்தால் தேவனை மகிமைப்படுத்துவோம். அவருடைய இரத்தத்தை சிலுவையில் சிந்தி நம்மை இரட்சித்த தேவனை நாம் முழு மனதோடே ஏற்றுக் கொண்டு, அவருக்காக வாழ தேவன் நம்மை வழிநடத்துவாராக. நாம் பாவங்களுக்கு செத்து, நீதிக்கு பிழைத்திருக்கும்படிக்கு அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார். (Iபேது 2:24) இந்த Good Fridayல் சிந்திப்போம். செயல்படுவோம். அல்லேலுயா!

## எனக்கன்பான பத்திரிகை வாசகர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்.


நீங்கள் **M.O.** அனுப்ப விரும்பினால் **Mrs. Sarah Vimal** என்ற பெயரில் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**Mrs. Sarah Vimal**
**Chosen Generation Assembly**
Church Street, Victor Lane,
Bagayam, Vellore - 632002.



### அவசர ஜெப உதவிக்கு

*“ஜெபக்குறிப்புகளை, கடிதங்களை அனுப்ப மற்றுமொரு வாய்ப்பு”*



**E-Mail : victorvimalcga@yahoo.com**

# கண்டவைகளும் கேட்டவைகளும்

## அற்புத சுகம் கொடுத்த தேவன்

என்னுடைய தகப்பன் உடல் நலக்குறைவினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு BP மற்றும் Sugar அதிகளவில் இருந்தது. மருத்துவர்கள் சிகிச்சை அளிதுத்தும் கொண்டிருக்கும் போது அவருக்கு Heart Attack வந்து விட்டது. மிகவும் மோசமான நிலை உண்டானது. நான் மிகவும் கலங்கி அழுது என் போதகரும் இல்லை எங்களுக்காக உதவி செய்யும் ஆண்டவரே என்று ஜெபித்தேன். அப்பொழுது மருத்துவர்கள் திரும்பவும் Heart Attack வந்தால் Bypass Surgery செய்ய வேண்டும். எனவே 2 லட்சம் பணம் செலவாகும் என்றார்கள். அப்பொழுது என் கூட யாரும் இல்லை. நான் தனிமையில் இருந்தேன். இயேசப்பாவிடம் ஒன்று மட்டும் சொன்னேன். உண்மையாய் தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் தேவன் சமீபமாய் இருக்கிறார் என்ற வசனத்தின்படி ஜெபித்தேன். அப்பொழுதுதான் pastor Uncle ஜெபித்து கொடுத்த எண்ணெய் எடுத்து உபயோகித்தேன். 24 மணி நேரத்தில் BP, Sugar எல்லாம் Normal ஆக தேவன் கிருபை செய்தார். Lung Infection எல்லாம் Normal ஆனது. இப்படியாய் அற்புத சுகம் கொடுத்த தேவனை துதிக்கிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

சகோதரி. **இந்துமதி,** வேலூர்.

## தொலைந்து போன பாஸ்போர்ட் கிடைத்தது

என்னுடைய கணவர் Dubai தேசத்திலிருந்து Pastor அவர்களுடைய அடக்க ஆராதனையில் கலந்து கொள்ளும்படி பிப். 10 ஆம் தேதி இந்தியா வந்தார். ஒரு வாரம் கழித்து மீள அவர் செல்ல வேண்டும். அப்பொழுது எல்லாவற்றை எடுத்து பயணத்திற்காக ஆயத்தப்படுத்தும் போது Passport காணவில்லை. உடனே Sis. Jessica அவர்களுக்கு Mesage செய்தேன். அவர்களும், பாஸ்டர் அம்மாவும் எங்களுக்காக தொடர்ந்து ஜெபித்தார்கள். ஊழியரோடு ஒரு மணி நேர ஜெபத்திலும் பாரபட்டு ஜெபித்தார்கள். அன்றைய தினமே அந்த Pass-port Airport ல் கிடைக்கும்படி கர்த்தர் கிருபை செய்தார். இன்னும் ஒரு

நாள் தாமதமாக போயிருந்தாலும் அது எங்கள் கைகளில் உரிய நேரத்தில் கிடைத்திருக்காது. வேலை ஸ்தலத்திலும் பெரிய பிரச்சனை ஏற்பட்டிருக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றி போட்ட தேவனுக்கு கோடான கோடி நன்றி.

சகோதரி. **ஷிப்ரா டேவிட்,** வேலூர்.

## தீர்க்கமாய் பேசும் கர்த்தர்

நான் காலை தியான கூட்டத்திற்கு வரும் போது மிகவும் கஷ்டத்தோடு ஆலயத்திற்கு வந்தேன். நான் தொடர்ந்து அழுது கொண்டே இருந்தேன். அப்பொழுது Pastor அம்மா தீர்க்க தரிசனமாய் நம் சபையை சார்ந்த சகோதரி நீங்கள் உங்கள் குடும்பத்தை குறித்து அழுது கொண்டிருக்கிறீர்கள். கர்த்தர் உங்களை தேற்றுவார் என்று கூறினார். ஆனால் அதற்கு முன்பாக நான் நினைத்தேன் இயேசப்பா, எங்கள் ஊழியக்காரர் கூட இல்லையே எப்படி யார் பேசுவார்கள் என்று. ஆனால் “நான் யாரைக் கொண்டாகிலும் பேசுவேன்” என்று சொன்ன வார்த்தையை நினைத்து தேவனுக்கு நன்றி செலுத்தினேன். அதே போல, என் தங்கையின் மாடு மிகவும் பெலவீனப்பட்டிருந்தது. அந்த மாடு கன்று ஈன்று 4 மாதங்கள்தான் ஆகிறது. இது எதுவும் ஊழியக்கார அம்மாவுக்கு தெரியாது. ஆனால் கர்த்தர் அம்மாவோடு காலை தியான கூட்டத்தில் தீர்க்கமாய் பேசினார். ஒரு பசுவும் அதின் கன்றும் நலமுடன் நின்று கொண்டிருக்கிறதென்று. எங்களுக்கு மிகுந்த ஆச்சரியம்.கர்த்தர் இப்படியாய் பாஸ்டர் அம்மாவையும் எடுத்து பயன்படுத்துகிறார் என்று உணர்ந்து தேவனை துதிக்கிறேன். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக.

சகோதரி. **திலகா,** வேலூர்.

## ஏப்ரல் 2025 மாதத்திற்கான வாக்குத்தத்தம்

*“கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய்.”*

- ஏசா 58 : 11

# தேடுங்கள் கண்டடைவீர்கள்

(கலாத்தியர் மற்றும் எபேசியர் பகுதியிலிருந்து கேள்விகள் எடுக்கப்பட்டுள்ளது.)

1. எதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் ?
2. பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் யாரால் வெளிப்படுத்தப்பட்டது ?
3. யாரை கூட்டிக் கொண்டு மறுபடியும் எருசலேமுக்குப் போனார் பவுல் ?
4. பவுலுடனே கூட இருந்த தீத்து எந்த தேசத்தை சேர்ந்தவன் ?
5. பேதுரு யாருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கையளிக்கப்பட்டது ?
6. கிறிஸ்து நமக்காச் சாபமாகி எதற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார் ?
7. எல்லாவற்றிற்கும் எஜமானாயிருப்பவன் யார் ?
8. நாம் மறுபடியும் எதின் நுகத்துக்கு உட்படக்கூடாது ?
9. கிறிஸ்துவுக்குள் பிதா நம்மை எங்கே ஆசீர்வதித்திருக்கிறார் ?
10. கிறிஸ்து இயேசுவுக்குள் எதினாலே சமீபமானோம் ?
11. எதினால் வல்லமையாய் பலப்பட வேண்டும் ?
12. கோபம் கொண்டாலும் எதைச் செய்யக்கூடாது ?
13. எது இன்னதென்று நீங்கள் சோதித்து பார்க்க வேண்டும் ?
14. எதை பகைத்தவன் ஒருவனுமில்லை ?
15. கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியக்காரன் என்று பவுல் யாரைக் குறிப்பிட்டார் ?

## கடந்த மாத இதழுக்கு சரியான விடையளித்தவர்கள்

### சகோதரிகள்

1. Sr. Florence Rajamohan - Aruppukottai
2. Sr. Jeyaseeli Jeyaraj - Lalgudi
3. Sr. Gnana Kalai Arasi - Vellore
4. Sr. Preethi - Vellore
5. Sr. Sudha - Vellore
6. Sr. Meera Pandian - Trichy
7. Sr. Theresa Edwin - K.G.F.
8. Sr. Alice Austine - Vellore
9. Sr. Buelah John- Vellore

### சகோதரர்கள்

1. Bro. Yesudoss - Vellore
2. Bro. Edward - Vellore
3. Bro. Srinivasan, Vellore
4. Bro. Godwin Premkumar -
5. Bro. Martin Paul Rufus kumar - Katpadi.

---

### கடந்த இதழின் கேள்விகளுக்கு சரியான விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | II கொரி 13 : 5 | 6. | II கொரி 9 : 9 | 11. | II கொரி 10 : 18 |
| 2. | II கொரி 1 : 24 | 7. | II கொரி 4 : 15 | 12. | II கொரி 7 : 5 |
| 3. | II கொரி 12 : 8 | 8. | II கொரி 11 : 33 | 13. | II கொரி 8 : 9 |
| 4. | II கொரி 2 : 12 | 9. | II கொரி 3 : 7 | 14. | II கொரி 6 : 11 |
| 5. | II கொரி 11 : 9 | 10. | II கொரி 5 : 8 | 15. | II கொரி 1 : 11 |

### ஆராதனை நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| காலை தியானம் | ஒவ்வொரு 1 ஆம் தேதி காலை 5 am – 6 am |
| பிரதி ஞாயிறு ஆராதனை | 9 am – 11.30 am |
| பிரதி செவ்வாய் | ஊழியருடன் ஒரு மணி நேர ஜெபம் 7.00 pm – 8.00 pm |
| பிரதி புதன் | வேதபாடக் கூட்டம் 7.30 pm – 8.30 pm |
| பிரதி வெள்ளி | சகோதரிகள் கூட்டம் 10.00 am – 12.00 noon |
| 2வது சனிக்கிழமை | உபவாசக் கூட்டம் 10.00 am – 2.00 pm |
| 3வது வெள்ளிக்கிழமை | முழு இரவு ஜெபம் 10.00 pm – 2.00 am |
| 4வது சனிக்கிழமை | காத்திருப்புக் கூட்டம் 7.00 pm – 8.30 pm |

Regd. under Newspaper RNI No.TNTAM/2015/66320 & Posting under / Book Pack of Containing Periodicals with RNI

# செய்திச் சிதறல்

1. சந்தைகளில் வரிவிதிப்பு அச்சம்; வெளியேறும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்.
2. தோல் பதனிடும் கழிவு நீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் இழப்பீடு பெறலாம் – இராணிப்பேட்டை கலெக்டர்.
3. ஆன்லைன் சூதாட்டம் : ஒடுக்க புது வியூகம்.
4. இடியாப்ப சிக்கலில் உக்ரைன் – ரஷ்யா போர் நிறுத்தம்.
5. விண்வெளியில் இருந்து 9 மாதங்களுக்கு பிறகு பூமிக்கு திரும்பிய சுனிதா வில்லியம்ஸ்.
6. மொழிகளை தேர்வு செய்யும் உரிமை மாநிலத்துக்கே.
7. சிந்து வெளி நாகரிகத்தை வெளிப்படுத்திய சர் ஹீபர்ட் மார்ஷல் உருவச்சிலை.
8. மணிப்பூரில் மீண்டும் வன்முறை. ஒருவர் கொலை; போலீஸ் குவிப்பு.
9. கடலில் எண்ணெய் கசிவு பாதிப்புக்கு ரூ.73 கோடி இழப்பீடு உத்தரவுக்கு பசுமை தீர்ப்பாயம் தடை.
10. மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துங்கள்.
11. பிளஸ் 2 தேர்வு விடைத்தாள்கள் மதிப்பீடு பணி ஏப்.4ல் தொடக்கம்.
12. யுனெஸ்கோ உத்தேச பட்டியலில் 6 இந்திய இடங்கள் சேர்ப்பு.

Pl. Contact : **Rev. Dr. VICTOR VIMAL / Mrs. SARAH VIMAL**
CHOSEN GENERATION ASSEMBLY
P.O. Bag No. 208, CGA Church Street, (Otteri Post Office Street)
Victor Lane, Otteri, Vellore - 632 002.Tamil Nadu, S. India.

Owned and Published by Mrs. Sarah Vimal Published from
97, Church Street, Govindaraj Nagar, Bagayam, Vellore - 632002. Tamilnadu. South India.
Printed by Mrs. R. Shanthi, Printedat Unity Printers, Velapadi, Vellore - 632001.
Editor : Mrs. Sarah Vimal